செ.வெ.எண் :637 நாள்: 30.09.2021

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

**தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் 02.10.2021 சனிக்கிழமை காந்தி ஜெயந்தி அன்று நடைபெற உள்ள கிராமசபைக் கூட்டத்தில் பங்கேற்க பொதுமக்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது அன்பான வேண்டுகோள்**

02.10.2021 சனிக்கிழமை காந்தி ஜெயந்தி அன்று காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் (தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ள ஊராட்சிகளை தவிர்த்து) கொரோனா பாதுகாப்பு வழிமுறைகளுடன் கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கிராம சபைக்கூட்டத்தில் கிராம ஊராட்சிகளின் வளர்ச்சி திட்டங்கள் குறித்து பொதுமக்களுடன் அனைத்து துறை அலுவலர்களும் பங்கேற்று விவாதிக்கவுள்ளனர்.

இக்கிராம சபைக்கூட்டத்திற்கு தஞ்சாவூர் மாவட்டத்தின் கிராம ஊராட்சிப் பகுதியில் உள்ள பொது மக்கள் அனைவரும் கொரோனா பாதுகாப்பு வழிமுறைகளுடன் முகக்கவசம் அணிந்து பங்கேற்று 02.10.2021 அன்று நடைபெறவுள்ள கிராம சபை கூட்டத்தினை சிறப்பித்திட **மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப. அவர்கள்** கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்**